தமிழ்நாடு அரசு

# 5 ஆம் வகுப்பு




தமிழ்

ஆங்கிலம்

கணக்கு

அறிவியல்

சமூக அறிவியல்

தீண்டாமை
மனிதநேயமற்ற செயல் – பெருங்குற்றம்

## பள்ளிக் கல்வித்துறை

தமிழ்நாடு அரசு
இலவசப் பாடநூல் வழங்கும்
திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

(விற்பனைக்கு அன்று)

© தமிழ்நாடு அரசு

முதல் பதிப்பு : 2012
(பொதுப் பாடத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

பாடநூல் உருவாக்கம் மற்றும் தொகுப்பு
ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம்,
கல்லூரிச் சாலை, சென்னை – 600 006.

அட்டைப்படம், புத்தகவடிவமைப்பு
பாலா

நூல் அச்சாக்கம்
தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்
கல்லூரிச் சாலை, சென்னை – 600 006.

இந்நூல் 80 ஜி. எஸ். எம். மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

விலை : ரூ.

ஆப்செட் முறையில் அச்சிட்டோர் :

# நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

# நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒரிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே! உனக்கு

வெற்றி! வெற்றி! வெற்றி!

# THE NATIONAL ANTHEM

Jana–gana-mana-adhinayaka jaya he
Bharata-bhagya-vidhata.
Punjaba-Sindhu-Gujarata-Maratha-
Dravida-Utkala-Banga
Vindhya-Himachala-Yamuna-Ganga
Uchchhala-jaladhi-taranga
Tava subha name jage,
Tava Subha asisa mage,
Gahe tava jaya-gatha.
Jana-gana-mangala-dayaka jaya he
Bharata-bhagya-vidhata
Jaya he, jaya he, jaya he,
Jaya jaya, jaya, jaya he.

- Rabindranath Tagore.

### SHORT VERSION

Jana-gana-mana-adhinayaka jaya he
Bharata-bhagya-vidhata.
Jaya he, jaya he, jaya he
Jaya jaya, jaya, jaya he.

### AUTHENTIC ENGLISH TRANSLATION OF THE NATIONAL ANTHEM

Thou art the ruler of the minds of all people,
Thou dispenser of India's destiny.
Thy name rouses the hearts of the Punjab, Sind,
Gujarat and Maratha, of Dravid, Orissa and Bengal.
It echoes in the hills of the Vindhyas and Himalayas,
mingles in the music of the Yamuna and Ganges
and is chanted by the waves of the Indian Sea.
They pray for Thy blessings and sing Thy praise
The saving of all people waits in Thy hand,
Thou dispenser of India's destiny.
Victory, Victory, Victory to Thee.

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணியம்' பெ. சுந்தரனார்.

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன்' என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் – பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

## INVOCATION TO GODDESS TAMIL

Bharat is like the face beauteous of Earth clad in wavy seas;

Deccan is her brow crescent-like on which the fragrant 'Tilak' is the blessed Dravidian land.

Like the fragrance of that 'Tilak' plunging the world in joy supreme reigns Goddess Tamil with renown spread far and wide.

Praise unto 'You, Goddess Tamil, whose majestic youthfulness, inspires awe and ecstasy.'

## THE NATIONAL INTEGRATION PLEDGE

“I solemnly pledge to work with dedication to preserve and strengthen the freedom and integrity of the nation.”

“I further affirm that I shall never resort to violence and that all differences and disputes relating to religion, language, region or other political or economic grievances should be settled by peaceful and constitutional means.”

## A STUDENT'S VOW BEFORE MOTHER INDIA

Name :

Class : School :

I shall overcome the obstacles raised by caste and communal prejudices and work for the greatness of my Motherland putting to the fullest use the benefits that I derive through education.

Vande mataram!

Signature



# பொருளடக்கம்

## தமிழ் (1 – 44)


| இயல் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | வாழ்த்து | 3 |
| | எனக்கு இறக்கைகள் முளைத்தால்... | 5 |
| | காடு எம் வீடு | 13 |
| 2. | திருக்குறள் | 15 |
| | செம்மொழியாம் தமிழ்மொழி | 18 |
| | வாழ்வின் வழிகாட்டி | 26 |
| 3. | நீதிநெறி விளக்கம் | 28 |
| | நெஞ்சை அள்ளும் தஞ்சைப் பெரியகோவில் (கடிதம்) | 31 |
| | மூன்று பொற்காசுகள் | 42 |
| 4. | அகரமுதலி | 44 |


பாடநூலில் ★ இவ்வுடுக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி

| | |
|---|---|
| வாழ்த்து 5 அடிகள் | நீதிநெறி விளக்கம் 8 அடிகள் |
| திருக்குறள் 6 அடிகள் | மொத்தம்19 அடிகள் |



## ENGLISH (45 – 77)


| UNIT | TITLE | PAGE No. |
|---|---|---|
| Unit – 1 | Prose – Our Mother Earth | 49 |
| | Poem – Wanting An Answer | 61 |
| Unit – 2 | Prose – A Golden Hour | 63 |
| | Poem – Little Drops Of Water | 76 |



# கணக்கு (78 –158)


| வ.எண் | பாடத்தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1. | வடிவங்கள் | 79 |
| 2. | எண்களும் இடமதிப்பும் | 90 |
| 3. | நான்கு செயல்பாடுகள் | 104 |
| 4. | கொள்ளளவு | 125 |
| 5. | நேரம் | 142 |
| 6. | பணம் | 148 |




# அறிவியல் (159 – 218)


| | | |
|---|---|---|
| 1. | பசுமை உலகம் | 161 |
| 2. | விலங்குகளின் வாழிடங்கள் | 176 |
| 3. | வண்ணத்துப்பூச்சியும் தேனீக்களும் | 185 |
| 4. | மனித மூளை மற்றும் புலன் உறுப்புகள் | 195 |
| 5. | தாவரவியல் பூங்கா | 207 |




# சமூக அறிவியல் (219–264 )


| | | |
|---|---|---|
| 1. | சங்ககாலம் | 221 |
| 2. | உலகை வலம் வந்த பயணிகள் | 229 |
| 3. | நாம் வாழும் பூமி | 239 |
| 4. | அடையாளம் காணுவோம் | 248 |
| 5. | எங்கும் எதிலும் | 255 |

# தமிழ்

## ஐந்தாம் வகுப்பு

### முதல் பருவம்


பாடநூல் குழு

குழுத்தலைவர்

த. தனுஷ்கோடி,

முதுநிலை விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம், காளையார்கோவில், சிவகங்கை.

மேலாய்வாளர்கள்

க. சு. சங்கீதா, உதவிப் பேராசிரியர், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சி இயக்ககம், சென்னை – 6.

அ. மணமலர்ச்செல்வி, விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம், கீழப்பழுவூர், பெரம்பலூர்.

வல்லுநர்

எ. முத்துக்கிருஷ்ணன்,

(மேனாள் கல்விப்பேரவைக் குழு உறுப்பினர், சென்னைப் பல்கலைக்கழகம்)

முதுநிலை விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம், திருவூர், திருவள்ளூர் மாவட்டம்.

நூலாசிரியர்கள்

முனைவர் தி. அமலோர், விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம், இலாஸ்பேட்டை, புதுச்சேரி.

சௌ. வெங்கடமத்வராஜ், தலைமை ஆசிரியர், ஊ . ஒ . நடுநிலைப்பள்ளி, மேலத்தட்டப்பாறை, தூத்துக்குடி மாவட்டம்.

க. உமாதேவி, தலைமை ஆசிரியர், ஊ . ஒ . நடுநிலைப்பள்ளி,எஸ்.எல்.வி. நகர், சூலூர் ஒன்றியம், கோவை மாவட்டம்.

புலவர் கோ. தணிகைமலை, தமிழாசிரியர், அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி, தேவிகாபுரம், திருவண்ணாமலை மாவட்டம்.

இரா. பொன்னுச்சாமி, தலைமை ஆசிரியர், ஊ. ஒ. தொ. பள்ளி, காரிக்கூட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.

இரா. வனிதா, தமிழாசிரியர், பாரதிநகர் மன்ற நடுநிலைப்பள்ளி, கணேசபுரம், காரைக்குடி, சிவகங்கைமாவட்டம்.

ஓவியம் : அரஸ்

வடிவமைப்பு : மாரீஸ்

| திறன் பகுதி | திறன் | பாடப்பகுதி |
|---|---|---|
| கேட்டல் | 1. விழிப்புணர்வுக் கதைகளைக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல்<br>2. கலந்துரையாடலைக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல் | இயல் 1, 2, 3 துணைப்பாடம்<br>துணைப்பாடம் |
| பேசுதல் | 1. குறித்த தலைப்பில் பேசுதல்<br>2. இயல்பாக உரையாடுதல் | இயல் 1, உரைநடை,<br>இயல் 1, 2, 3 துணைப்பாடம் |
| படித்தல் | 1. அழைப்பிதழ்கள்/நிகழ்ச்சி அறிவிப்புகள்/ துண்டு வெளியீடுகளைப் படித்தல் | இயல் 2 உரைநடை, பயிற்சிகள் |
| எழுதுதல் | 1. பொருளுணர்வுக்கேற்ப இடைவெளிவிட்டு எழுதுதல்<br>2. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுதல்<br>3. உறவுமுறைக் கடிதம் எழுதுதல் / நாட்குறிப்பு எழுதுதல் | அனைத்து இயல்<br>இயல் 3, உரைநடை,<br>இயல் 3, உரைநடை, பயிற்சி |
| படைப்பாற்றல் | 1. பாடல் எழுதுதல்<br>2. அழைப்பிதழ் உருவாக்குதல் | இயல் 2, பயிற்சிகள்<br>இயல் 2 |
| நடைமுறை இலக்கணம் | 1. இணைப்புச் சொற்களை அறிந்து பயன்படுத்துதல்<br>2. மரபுத்தொடர்களை அறிதல்<br>3. இணைச்சொற்களை அறிதல் | இயல் 3 பயிற்சி<br>இயல் 2 பயிற்சி<br>இயல் 3 பயிற்சி |
| தானே கற்றல் | 1. சிறுசிறு கதைகளைப் படித்தல்<br>2. அகரமுதலியைப் பயன்படுத்துதல் | இயல் 1, 2, 3 துணைப்பாடம்<br>இயல் 1, 2, 3 உரைநடை |
| சொல்லாட்சித் திறன் | 1. சொற்களஞ்சியம் பெருக்குதல் | அனைத்து இயல் |



## வாழ்த்து

திருவடி தொழுகின்றோம் – அன்பொடு
திருவடி தொழுகின்றோம்
தருமம் தழைத்திடவே
சத்தியம் ஓங்கிடவே
பருவமழை பொழிந்து
பயிர்கள் செழித்திடவே
திருவளர் கலையெல்லாம்
தினமும் வளர்ந்திடவே
அருள்வழி போற்றி மக்கள்
அனைவரும் வாழ்ந்திடவே (திருவடி...)

– கவிமணி தேசிக விநாயகம்

### பாடல்பொருள் :

நாட்டில் அறம் பெருக வேண்டும்; உண்மை நிலைபெற வேண்டும். பருவமழை பொழிந்து பயிர்கள் செழித்து வளர வேண்டும். மேன்மை பொருந்திய கலைகளெல்லாம் வளர வேண்டும். மக்கள் உயிர்களிடத்தில் கருணை கொண்டு வாழ வேண்டும். இவை அனைத்தும் நிறைவேற, இறைவா! உம்மை வணங்குகிறோம்.

### சொல்பொருள் :

| | | |
|---|---|---|
| தொழுதல் | – | வணங்குதல் |
| தருமம் | – | அறம் |
| தழைத்திட | – | பெருகிட, மிகுந்திட |
| சத்தியம் | – | உண்மை |
| ஓங்கு | – | உயர்ந்து நிலை பெற |
| திருவளர் கலை | – | மேன்மை பொருந்திய கலை |

## ஆசிரியர் குறிப்பு



| | | |
|---|---|---|
| பெயர் | : | தேசிக விநாயகம் |
| ஊர் | : | கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தேரூர் |
| பெற்றோர் | : | சிவதாணு, ஆதிலட்சுமி |
| சிறப்புப் பெயர் | : | கவிமணி |
| இயற்றிய நூல்கள் | : | மலரும் மாலையும், மருமக்கள்வழி மான்மியம், உமர்கய்யாம் பாடல்கள், ஆசிய சோதி. |
| காலம் | : | 27–07–1876 முதல் 26–09–1954 வரை |

## பயிற்சிகள்

### அ. வகுப்பறையில் பேசுக.

1. நீ எப்போதெல்லாம் இறைவனை வழிபடுவாய் ?
2. நீ இறைவனிடம் என்னவெல்லாம் வேண்டுவாய் ?

### ஆ. பிரித்து எழுதுக.

1. திருவடி = ____________________
2. கலையெல்லாம் = ____________________
3. பருவமழை = ____________________

### இ. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. தருமம் தழைத்து ____________ ஓங்க வேண்டும்.
2. பயிர்கள் செழித்து வளர ____________ பொழிய வேண்டும்.
3. மக்கள் ____________ வழியில் வாழ வேண்டும்.

### ஈ. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தருமத்தைக் குறிக்கும் சொல் ____________
   ( அ ) மறம் ( ஆ ) அறம் ( இ ) நிறம்

2. சத்தியம் என்பதைக் குறிக்கும் சொல் ____________
   ( அ ) உண்மை ( ஆ ) பொய்மை ( இ ) இன்மை

### உ. ஒத்த ஓசையுடைய சொற்களைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுக.

(எ.டு.) செழித்திடவே __________ , __________ , __________ , __________ .

### ஊ. விடை எழுதுக.

கவிமணி இறைவனிடம் வேண்டுவன யாவை ?

# எனக்கு இறக்கைகள் முளைத்தால். . !

சில்லென்று காற்று வீசியது. கீச்... கீச்... என்ற ஒலியுடன் பறவைகள் வானில் அழகாகப் பறந்து கொண்டிருந்தன. இந்தப் பறவைகள் எங்கே செல்கின்றன ? எதற்காகச் செல்கின்றன ? அவை என் கண்களிலிருந்து மறையும்வரை பார்த்துக் கொண்டிருந்தேன். பறவைகளுக்குக் கட்டுப்பாடு இல்லை. அவை எங்கும் பறந்து திரியலாம். எனக்கும் வானில் பறந்து திரிய ஆசைதான். ஆனால், இறக்கைகள் இல்லையே!



எனக்கு இறக்கைகள் முளைத்தால்..! கண்களை மூடிக்கொண்டேன். என் உடம்பில் ஏதோ மாற்றம் ஏற்படுகிறது. ஆ! எனக்கு இறக்கைகள் முளைக்கின்றன. அவை அழகிய மென்மையான பட்டுப் போன்ற இறக்கைகள். அந்த இறக்கைகளை அசைத்துப் பார்க்கிறேன். காற்றில் மிதப்பது போல் இருக்கிறதே! புதிய உணர்வு. என்னால் இப்போது பறக்க முடிகிறது! ஆகா, என்னால் இப்போது பறக்க முடிகிறது! திரும்பத் திரும்பக் கூறி மகிழ்கிறேன்.

சிறகடித்து விண்ணில் பறக்கிறேன். மேலிருந்து பார்க்கிறேன். ஆ! மனிதர்கள் சிற்றெறும்புகளாய்க் காட்சி அளிக்கிறார்கள். வீடுகள் சின்னஞ்சிறு பெட்டிகளாய், சாலைகள் கருங்கோடுகளாய்த் தெரிகின்றன. கதிரவனின் கதிர்கள் வெப்பத்தை வீசுகின்றன. எனக்கு நா வறட்சி ஏற்படுகிறது.

அதோ குளம்! அங்குச் சென்று நீர் அருந்தலாம் என எண்ணிக் குளத்தை நெருங்குகிறேன். குளம் மிகவும் தூய்மையற்றுக் காணப்படுகிறது. குளத்தில் குப்பைகூளங்கள், நெகிழிப் புட்டிகள், நெகிழிப் பைகள் மிதந்து கொண்டிருக்கின்றன. குளத்துநீர், பாசிபடர்ந்து நுரைத்துக் கழிவுநீர்போல விரும்பத்தகாத அழுகல்மணம் வீசுகிறது. குளத்தைச் சுற்றியுள்ள மரங்கள் வெட்டப்பட்ட நிலையில், மொட்டை மரங்களாய்க் காணப்படுகின்றன.

"காடு செழித்தால் மழை பொழியும்"
"மழை பொழிந்தால் மண் குளிரும்"
"மழை பெற மரங்கள் வேண்டும்"

என்பதை அறியாமல் மனிதர்கள் இத்தவறுகளைச் செய்திருக்கிறார்கள். என் நீர்வேட்கையைத் தணிப்பது எவ்வாறு? வேதனையுடன் பறக்கிறேன்; கீழே பார்க்கிறேன்; பெரிய நகரம் தெரிகிறது. தொழிற்சாலைகளிலிருந்து அமிலப்புகை வெளியேறிக் கொண்டிருக்கிறது; அதனால், நகரமே மங்கலாகத் தெரிகிறது. என் கண்கள் புகைபட்டதனால் எரிகின்றன. நச்சுக்காற்றினால் மூச்சுத்திணறல் ஏற்படுகிறது.



மேகமூட்டம் போன்ற புகை மண்டலத்தை விரைவாகக் கடக்கிறேன். போக்குவரத்து வண்டிகள், தொழிற்சாலைகள் வெளிவிடும் புகையினால் மனிதர்களுக்குப் பல்வேறு நோய்கள் ஏற்படுமே; காற்று மாசுபடுமே. இந்நிலை தொடர்ந்தால் நுரையீரல் புற்றுநோய், மூச்சுக் கோளாறு, சளித்தொல்லை முதலியவை ஏற்பட்டு மக்களை வாட்டுமே.

தொடர்ந்து விண்ணில் பறக்கிறேன்; கீழே பார்க்கிறேன். அந்த நகரத்தை ஒட்டி ஆறு ஒன்று ஓடிக்கொண்டு இருக்கிறது. ஆனால், அது சாக்கடையாய்க் காட்சியளிக்கிறது. தொழிற்சாலைகளின் வேதிக்கழிவுகள், சாயப்பட்டறைகளின் கழிவுகள் முதலியன ஆற்றில் கலந்து கொண்டிருக்கின்றன. இந்த நீரைக் குடிக்கும் உயிரிகளுக்குப் பல நோய்கள் ஏற்படும். மக்களுக்குச் சிறுநீரகக் கோளாறுகள், மஞ்சள் காமாலை, காய்ச்சல், வாந்தி, பேதி முதலிய நோய்கள் ஏற்படும்.

எனக்கு நீர்வேட்கை மிகுந்தது; கவலையோடு பறந்தேன். அதோ! பறவைகள் கூட்டங்கூட்டமாய்ப் பறந்து செல்கின்றன. அவற்றை நானும் பின்தொடர்கிறேன்; நெடுந்தொலைவு செல்கிறேன். அதோ! உயர்ந்த மலைத்தொடர். அங்கு இருந்து வரும் குளிர்காற்று என்னை மெல்ல வருடுகிறது. மலைமுகடுகளில் மேகக்கூட்டங்கள் தவழ்ந்து கொண்டிருக்கின்றன. அவற்றின் நடுவே பறக்கிறேன்.



அம்மலையில் மூலிகை மணம் கலந்த தூயகாற்று வீசுகிறது. நெடிதுயர்ந்த மரங்கள் வானை முட்டுகின்றன. எங்கும் பசுமையான செடிகொடிகள். பல வண்ணப் பூக்களைச் சுமந்து நிற்கும் தாவரங்கள் காற்றில் அசைந்து ஆடுகின்றன. தேனீக்களும் வண்டுகளும் இன்னொலி எழுப்புவதைக் கேட்டு, என் மனம் மகிழ்கிறது. பல வண்ணங்களில் அழகழகாய் வண்ணத்துப்பூச்சிகள் சிறகடித்துப் பறக்கின்றன. பல வண்ணப் பறவைகளின் ஒலிகளைப் பாடலாய்க் கேட்டு மகிழ்கிறேன். ஆர்ப்பரிக்கும் அருவிகள் வைரத்தொங்கலாய் விழுகின்றன. சலசலக்கும் ஓடைகள் பசுமையான புல்வெளிகளில் பாய்கின்றன.

இந்த இயற்கைக் காட்சியின் ஊடே யானைகள், மான்கள், காட்டெருமைகள் ஆகியவை இருப்பதைக் கண்டு மகிழ்கிறேன். கீழே இறங்கிவிட்டேன். தெளிந்த நீரோடையில் களைப்புத் தீர நீரைக் குடித்தேன்; அந்நீர் மிகுந்த சுவையாக இருந்தது. இயற்கையை எண்ணியெண்ணி வியந்தேன். இந்த நீரோடைகள்தாமே நகரத்திற்கு ஆறுகளாக ஓடி வருகின்றன; ஆனால், இவ்வளவு சுவையான நீர் அங்குக் கிடைப்பதில்லையே, என்ன காரணம்? இந்தத் தூய்மையான நீரும் காற்றும் அனைவருக்கும் கிடைக்க என்ன செய்யலாம்? எனச் சிந்தித்தபோது.....

"மங்கை !... எழுந்திரு, தூங்கியது போதும்" என்றாள் அம்மா.

**மங்கை செய்த சிந்தனை என்னவாக இருந்திருக்கும்?**



## பயிற்சிகள்

### I. அ. வகுப்பறையில் பேசுக.

1. நான் ஊர்த் தலைவரானால்...
2. எனக்கு இறக்கைகள் முளைத்தால்....

### ஆ. கலந்துரையாடுக.

நம் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் நெகிழிப் பொருள்கள் ஏற்படுத்தும் தீமைகள் குறித்து வகுப்பில் கலந்துரையாடுக.

### இ. எழுதுக.

யார் கண்ணுக்கும் தெரியாமல் மறையும் ஆற்றல் எனக்குக் கிடைத்தால்...

ஈ. இப்பாடத்தில் நீ புரிந்து கொண்ட செய்தியைக் கருத்துப் படமாக வரைக.

## உ. அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

1. அமிலப்புகை – ____________
2. வேதிக்கழிவு – ____________
3. நெடிதுயர்ந்த – ____________

## ஊ. பிரித்து எழுதுக.



1. கருங்கோடு = ____________
2. உடம்பெல்லாம் = ____________
3. காட்டெருமைகள் = ____________
4. நீரோடை = ____________

## எ. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. மழை பெற ____________ வளர்க்க வேண்டும்.
2. தொழிற்சாலைகளிலிருந்து ____________ புகை வெளிவருகிறது.
3. சாயப் பட்டறைகளிலிருந்து ____________ நீரில் கலக்கின்றன.
4. வண்டுகள் ____________ எழுப்பும்.
5. மலைமுகடுகளில் ____________ கூட்டங்கள் தவழ்கின்றன.

## ஏ. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. முகடு என்பதன் பொருள் ____________
   (அ) உயரம் (ஆ) உச்சி (இ) நீளம்
2. அருவி என்பதன் பொருள் ____________
   (அ) வாய்க்கால் (ஆ) ஆறு (இ) மலையின்வீழ் நீர்
3. தணித்தல் என்பதன் பொருள் ____________
   (அ) அதிகமாக்குதல் (ஆ) குறைத்தல் (இ) உயர்த்தல்
4. தொழிற்சாலையின் வேதிக்கழிவுகள் ____________ கலந்து கொண்டிருந்தன.
   (அ) ஆற்றுக்கு (ஆ) ஆற்றால் (இ) ஆற்றில்

## ஐ. சொற்றொடரில் அமைத்து எழுதுக.

1. எண்ணியெண்ணி : ____________
2. விண்ணில் : ____________

## ஒ. விடை எழுதுக.

1. மங்கை கனவில் கண்ட குளம் எவ்வாறு காட்சியளித்தது ?
2. மங்கை மனம் வருந்தக் காரணம் என்ன ?
3. தொழிற்சாலைகள் வெளிவிடும் புகையால் ஏற்படும் பாதிப்புகள் யாவை ?
4. மங்கை கண்ட இயற்கைவளம் பற்றி எழுதுக.

## II. மயங்கொலிகள் அறிக.

### அ. உரிய ஒலிப்புடன் வாய்விட்டுப் படிக்க.

1. அப்பா வேலை முடிந்து மாலை வேளையில் வீட்டுக்குத் திரும்புவார்.
2. மலை அடிவாரத்தை அடைந்தேன்; மழை பெய்யத் தொடங்கியது.
3. கந்தன் காலையில் வயலுக்குச் சென்றான்; காளைகளை ஏரில் பூட்டினான்.
4. வானில் மின்னல் பளிச்சிட்டது. இடி இடித்த ஒலி கேட்டது.
5. கிளி அழகான பறவை; அதன் அலகு சிவப்பாக இருக்கும்.

### ஆ. வேறுபாடு அறிக.

அழகு = எழில்

அலகு = பறவையின் மூக்கு

கலை = ஓவியம் முதலிய நுண்கலைகள்

களை = தேவையற்ற புல் வகைகள்

ஒலி = சத்தம்

ஒளி = வெளிச்சம்

ஒழி = இல்லாமல் போதல்

வால் = ஓர்உறுப்பு

வாள் = ஒரு கருவி

வேலை = பணி

வேளை = காலம்

தலை = ஓர் உறுப்பு

தழை = இலை

தளை = கட்டு

### இ. பொருத்தமான சொல்லை எடுத்து எழுதுக.

1. யானை மிகுந்த ______________ வாய்ந்த விலங்கு. (பலம் / பழம்)
2. பலம் இல்லை என்றால் ___________ தூக்க முடியாது. (பளு / பழு)
3. பள்ளி மணி_________________ (ஒலித்தது / ஒளித்தது)
4. யாழினி _________ உயர்ந்த ஆடைகளை அணிந்திருந்தாள். (விலை / விளை)
5. எலி_________________ வாழ்கிறது. (வலையில் / வளையில்)
6. ஓவியர் வண்ணங்களைக் ______________ (குழைத்தார் / குலைத்தார்)

### ஈ. பிழைகளை நீக்கி எழுதுக

அதிகாளையில் கோலி கூவும். கதிரவன் உதயமாகும் பொலுது நாம் கண் விலிக்க வேண்டும். ஆதுவே மிகச் சிறந்த பலக்கமாகும்.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

**உ. ஒத்த ஒலிப்புடைய சொற்களைக் கொண்டு நிரப்புக.**

1. வட்டமான தட்டு
   தட்டு நிறைய ____________________



2. அப்பா வாங்கினார் நுங்கு – அதை
   அனைவருக்கும் போட்டார் ____________________



3. பள்ளி சென்றாள் செல்வி – அங்குப்
   பாங்காய்க் கற்றாள் ____________________



4. துள்ளிச் சென்றாள் வள்ளி – அவள்
   கால் கொலுசோ ____________________



5. அம்மா சென்றாள் சந்தை – அங்கே
   வாங்கி வந்தாள் ____________________



**ஊ. நீ கண்டுகளித்த இயற்கைக் காட்சியை வரைந்து வண்ணம் தீட்டுக.**

எ. மலைத்தொடரின் ஒரு பகுதி. இதனை வருணித்து எழுதுக.



______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

### செயல்திட்டம்

- ☺ தொலைக்காட்சியில் தலைவர்கள் மற்றும் அறிஞர்கள் பேசும் பேச்சுகளைக் கேட்டறிந்து வகுப்பறையில் கூறுக.
- ☺ சிறுவர் இதழ்களிலிருந்து கதைகளைத் தொகுத்து வருக.


துணைப்பாடம்

# காடு எம் வீடு

இயல் –1

காட்டில் சுட்டெரிக்கும் வெயில். அங்கு வாழும் விலங்குகளும் பறவைகளும் ஓரிடத்தில் கூடின. தலைவனான புலி, “எல்லாரும் நான் சொல்வதைக் கேளுங்கள். நாம் உயிர் வாழ்வதற்கு நீர் வேண்டும். ஆனால், மழை இப்பொழுது எல்லாம் அவ்வளவாகப் பெய்வதில்லை. இதற்கெல்லாம் காரணம் காடுகள் அழிவதே” என்றது.

அப்போது, யானை வலம் இடமாகத் தலையை ஆட்டிக்கொண்டு, “காட்டை நாம் அழிப்பதில்லை! மனிதர்கள்தாம் மரங்களை வெட்டிக் காட்டை அழிக்கிறார்கள்” என்று புலம்பியது.



" உண்மை! காட்டை அழிப்பது மனிதர்களே! அவர்கள் தங்கள் எதிர்கால வாழ்க்கையை நினைத்துப் பார்ப்பதில்லை. அவர்களாகத் திருந்தினால் தான் உண்டு", என்றது புலி. பறவைகளும் விலங்குகளும் தலையை மேலும் கீழும் ஆட்டி அதை ஏற்றுக்கொண்டன.

"காடுகளை வளர்க்க நாங்கள் என்ன செய்ய வேண்டும் ?", எனப் பறவைகள் கேட்டன. "கிளிகளே! கிடைக்கும் பழங்களையெல்லாம் தின்று அவற்றிலுள்ள விதைகளைக் காடெல்லாம் பரப்புங்கள்",என்றது புலி.

அப்போது காகங்கள், " புலி அண்ணா ! நாங்கள் வேம்பு, ஆல், அத்தி, அரசு ஆகியவற்றின் பழங்களை விதையுடன் தின்று நிலத்தில் எச்சமிட்டுப் பரப்புகிறோம்",என்றன.

"நாங்கள் தும்பிக்கையால் தண்ணீர் ஊற்றுகிறோம்; விதைகள் முளைக்கட்டும்; செடிகள் வளரட்டும்; மரங்கள் வளர்ந்து காடே பசுமையாகட்டும்" என்றன யானைகள். "இரவு பகலாகக் காட்டைக் காவல் காக்கும் பொறுப்பு எங்களுடையது",என்றன நரிகள்.

"நாம் அனைவரும் உயிர்மூச்சாகக் கொண்டு காட்டைக் காப்போம்" என்றது புலி. சில ஆண்டுகள் கழிந்தன. காடெங்கும் பசுமை! பசுமை....! திடீரென்று வானம் இருண்டது. மழை கொட்டோ கொட்டென்று கொட்டியது. காட்டில் உள்ள நீர்நிலைகள் அனைத்தும் நிரம்பின. விலங்குகளும் பறவைகளும் மகிழ்ச்சியால் ஆடிப் பாடின. அவை புதியதோர் உலகை உருவாக்கிவிட்டன. ஆனால் மனிதன் ?

**சிந்தித்துப் பேசுக**

- பாடப்பகுதியிலிருந்து நீ உணர்ந்து கொண்ட செய்தியைப் பற்றிக் கூறுக.
- மரம் வளர்க்க நாம் செய்ய வேண்டுவன பற்றிக் கூறுக.

புவி வெப்பமயமாதலைத் தடுக்க மரக்கன்றுகள் நட்டு வளர்ப்போம்.

செய்யுள்

# திருக்குறள்

இயல் –2



## வான்சிறப்பு

1. விசும்பின் துளிவீழின் அல்லால் மற்றாங்கே
   பசும்புல் தலைகாண் பரிது

பாடல்பொருள் : வானத்திலிருந்து மழை பெய்யாவிட்டால் உலகில் பசும்புல்லின் நுனியையும் காண்பது அரிதாகிவிடும்.

சொல்பொருள் :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விசும்பு | – | வானம் | துளி | – | மழைத்துளி |
| அரிது | – | இயலாது | | | |

2. நீரின்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
   வானின்று அமையாது ஒழுக்கு. ★

பாடல்பொருள்: நீர் இல்லாமல் உலகில் எந்த உயிரும் வாழ இயலாது. நீருக்குக் காரணமான மழை பெய்யாவிட்டால், பசியால் ஒழுக்கமும் இல்லாமல் போய் விடும்.

சொல்பொருள் :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒழுக்கு | – | ஒழுக்கம் | நீரின்று | – | நீர் இல்லாமல் |
| வானின்று | – | மழை இல்லாமல் | | | |

## விருந்தோம்பல்

1. வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
   பருவந்து பாழ்படுதல் இன்று.

பாடல்பொருள் : நாள்தோறும் தன்னை நாடிவரும் விருந்தினரைப் பாதுகாப்பவனுடைய வாழ்க்கை, துன்பம் வந்தபோதும் கெடுவது இல்லை.

சொல்பொருள் :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வைகலும் | – | நாள்தோறும் | ஓம்புவான் | – | பாதுகாப்பவன் |
| பருவந்து | – | துன்புற்று | பாழ்படுதல் | – | வீணாதல் |
| இன்று | – | இல்லை | | | |

2. மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. ★



பாடல்பொருள் : அனிச்சமலர் முகர்ந்த அளவில் வாடிவிடும். விருந்தினரின் முகமோ மாறுபட்டுப் பார்த்த அளவிலேயே வாடும்.

சொல்பொருள்:

மோப்ப – முகர்ந்து பார்க்க
குழையும் – வாடும்
திரிந்து – மாறுபட்டு
நோக்க – பார்க்க

## கேள்வி

1. எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். ★

பாடல்பொருள்: எந்தச் செய்தியாயினும் ஒருவன் நல்லனவற்றையே கேட்டறிய வேண்டும். அக்கேள்வியறிவே எல்லா வகையிலும் அவனுக்கு நிறைந்த பெருமையைத் தரும்.

சொல்பொருள் :

எனைத்தானும் – எந்தச் செய்தியாயினும்
அனைத்தானும் – எல்லா வகையிலும்
ஆன்ற – நிறைந்த

2. நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயின ராதல் அரிது.

பாடல்பொருள்: நுட்பமாகக் கேட்டறியும் திறனைப் பெறாதவர், பணிவு மிக்க சொற்களைப் பேசுபவராக இருத்தல் இயலாது.

சொல்பொருள் :

நுணங்கிய – நுட்பமான
அரிது – இயலாது
அல்லார் – அல்லாதவர்



ஆசிரியர்குறிப்பு:

பெயர் – திருவள்ளுவர்
காலம் – கி.மு. 31
வேறுபெயர்கள் – தெய்வப்புலவர், செந்நாப்போதார், பொய்யில்புலவர்.

## பயிற்சிகள்

### அ. வகுப்பறையில் பேசுக.

1. மழைநாளில் உன் அனுபவம் குறித்துக் கூறுக.
2. உன் வீட்டிற்கு வரும் விருந்தினர்களை எவ்வாறு வரவேற்று விருந்தளிப்பாய்?

### ஆ. கலந்துரையாடுக.

பணிவுடைய சொற்களைப் பேசிப்பழகத் தேவையானவை பற்றி வகுப்பில் கலந்துரையாடுக.

### இ. எழுதுக.

தொலைக்காட்சியில் நீ கேட்ட திருக்குறள் விளக்கத்தினை எழுதுக.

### ஈ. பிரித்து எழுதுக.

1. உலகெனின் = ______________
2. மற்றாங்கே = ______________
3. முகந்திரிந்து = ______________
4. கேள்வியரல்லார் = ______________
5. வாயினராதல் = ______________

### உ. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. முகர்ந்து பார்த்தாலே வாடும் மலர் ______________

(அ) சூரியகாந்தி மலர் (ஆ) அனிச்சமலர் (இ) முல்லைமலர்

2. நல்லனவற்றைக் கேட்பதனால் கிடைப்பது ______________

(அ) கயமை (ஆ) பெருமை (இ) சிறுமை

3. விசும்பு என்பதனைக் குறிக்கும் சொல் ______________

(அ) நிலம் (ஆ) காற்று (இ) வான்

### ஊ. விடை எழுதுக.

1. பூமியில் எப்போது புல் கூட முளைக்காது?
2. மழை பெய்யாவிடில் உலகில் எது இல்லாமல் போய்விடும்?
3. துன்பத்தால் வருந்திக் கெடாதவர் யார்?
4. விருந்தினர் எப்போது, எப்படி வாடுவர்?
5. நுட்பமாகக் கேட்டறியும் திறனால் பெறும் நன்மைகள் யாவை?

# செம்மொழியாம் தமிழ்மொழி

## ( கருத்தரங்கம் )

தென்றல் : இன்றைய இலக்கியமன்றத் தொடக்க விழாவினை நம் பள்ளித் தலைமையாசிரியர் அவர்களைத் தலைமை ஏற்று நடத்திக் கொடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அழகன் : நான், அதை வழிமொழிகிறேன்.

தென்றல் : தமிழ்த்தாய் வாழ்த்து.

(அனைவரும் எழுந்து நின்று பாடுதல்)

தலைமை ஆசிரியர் : ஆசிரியப் பெருமக்களே! அன்புக் குழந்தைகளே! அனைவர்க்கும் என்னுடைய அன்பு வணக்கம். செம்மொழியாம் நம் தமிழ்மொழி அளப்பரிய சிறப்புகளைக் கொண்ட அமுதமொழி. தமிழ்மொழியின் சிறப்புகளில் தொன்மை, இனிமை என்னும் தலைப்புகளில் பேச உள்ள, உங்களைக் கண்டு பெரிதும் அகமகிழ்கிறேன். உங்களுக்கு என் பாராட்டுகளும் நல்வாழ்த்துகளும்.

தென்றல் : 'தமிழின் தொன்மை' என்னும் தலைப்பில், தன் கருத்துகளை எடுத்துரைக்க மாணவி முல்லையை அழைக்கிறேன்.

முல்லை : அவையோர்க்கு வணக்கம். உலகில் ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன. அவற்றுள் செம்மொழியாக அறிவிக்கப்பட்ட மொழிகள் ஆறு. அவை கிரேக்கம், இலத்தீன், சீனம், ஈப்ரூ, அரேபியம், சமற்கிருதம் ஆகியன. நம் தாய்மொழியாம் தமிழோ, காலத்தால் முந்தையது. மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர், 'தொன்மை, தாய்மை, வளமை, இளமை, இனிமை, நுண்மை முதலிய சிறப்புகளைக் கொண்டது தமிழ்மொழி' என்றும், 'தமிழே, உலகின் முதன் மொழி, மூத்த மொழி' என்றும் குறிப்பிடுகிறார். உலக அளவில் தமிழ்மொழியைச் செம்மொழியாக அறிவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


அமெரிக்க மொழியியல் அறிஞரான நோம்சாம்சுகி, 'உலக மொழிகளுக்கு எல்லாம் தாய்மொழி தமிழாகத்தான் இருக்கவேண்டும்' என்று கூறியுள்ளார்.




தேனி மாவட்டம் புலிமான் கோம்பை மற்றும் தாதப்பட்டி என்னும் ஊர்களில் கிடைத்த நடுகல் கல்வெட்டுகள்



இயல்பு



நிறமாற்றம்



செப்பம்

திருமுருகாற்றுப்படை எழுதப்பட்ட ஓலைச்சுவடி

பூம்புகாரை ஒட்டிய கடற்பகுதியை ஆய்வு செய்த அறிஞர் ஒருவர், தமிழ்க் கல்வெட்டு ஒன்றைக் கண்டுபிடித்தார். அவர், தமிழ்மொழி பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முந்தையது என்று தெரிவித்துள்ளார். கிரேக்க, இலத்தீன் மொழிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ்ச்சொற்கள் இருப்பதை ஞானகிரியார் என்னும் அறிஞர் எடுத்துக் காட்டியிருக்கிறார்.



பழனி – பொருந்தல் அகழ்வாய்வில் கிடைக்கப்பெற்ற சுடுமண் பொம்மைகள்

தமிழ்மொழி, தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலைப் பெற்றுத் திகழ்கிறது. தமிழ்மொழி எப்போது தோன்றியது என்னும் வினாவுக்கு விடை கூறுவது கடினம்.

நம் தமிழ்மொழி உலகில் வேறு எந்த மொழியும் பெற்றிடாத பெருஞ்சிறப்புகளைப் பெற்ற மொழி. இரண்டாயிரத்து எழுநூறு ஆண்டுகள் தொடர்ச்சியான இலக்கண இலக்கிய வளங்களைக் கொண்டுள்ள மொழி. அதனால்தான் உலகின் முதல் மொழியாகவும் செவ்வியல் மொழியாகவும் செம்மொழியாகவும் திகழ்கிறது. எனவே அதனைப் போற்றி வளர்ப்போம். நன்றி, வணக்கம்!



தமிழரின் பழங்கால நாணயங்கள், அணிகலன்கள்

**தென்றல்** : 'தமிழின் இனிமை'என்னும் தலைப்பில் கருத்துகளை வழங்க மாணவன் மணவாளனை அழைக்கிறேன்.

**மணவாளன்** : அவையோரை வணங்குகிறேன். உலக மொழிகளுள் மிகுந்த அழகும் திருத்தமும் ஒழுங்கும் கொண்டது, தமிழ். தமிழ் என்னும் சொல்லுக்கு இனிமை என்பது பொருள். தமிழ் என்னும் சொல்லிலேயே வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய மூன்று எழுத்துகளும் இடம்பெற்றுள்ளன.

தமிழ், தமிழ், தமிழ் எனப் பன்முறை அடுக்கிக் கூறினால் அமிழ்து எனவும், அமிழ்து, அமிழ்து, அமிழ்து எனக் கூறும்போது தமிழ் என ஒலிப்பதும் தமிழின் இனிமையாகும். தமிழ் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழைக் கொண்டது. தமிழ்மொழியைக் குறிக்க அருந்தமிழ், செந்தமிழ், பைந்தமிழ், தீந்தமிழ், தென்தமிழ், வண்டமிழ், தண்டமிழ், நற்றமிழ், நெடுந்தமிழ், அன்னைத்தமிழ்,

ஈடு இணையற்ற சொல்வளமும் கருத்துச் செறிவும் மிக்கது, தமிழ்மொழி. ஈ, வா, கை, தை, வை, பை, மை முதலிய நாற்பத்திரண்டு ஒரெழுத்துச் சொற்களும் ஒருபொருள் குறித்த பல சொற்களும் தமிழில்தான் மிகுதியாக உள்ளன. ஒரு கருத்தைப் பிறருக்குத் தெரிவிப்பதற்குக் கூறுதல், செப்புதல், உரைத்தல், மொழிதல், பகர்தல், விளம்புதல், அறைதல், இயம்புதல், நவிலுதல் முதலிய நாற்பது சொற்கள் உள்ளன.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு, ஐம்பெருங் காப்பியங்கள், ஐஞ்சிறுங்காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள் எனப் பல்வகை இலக்கியங்களைப் பெற்றுள்ளது, தமிழ்.

'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்'

– என்று பாரதியாரும்,

'இனிமைத் தமிழ்மொழி எமது – எமக்கு
இன்பம் தரும்படி வாய்த்த நல்அமுது'

– என்று பாரதிதாசனும்

தமிழின் இனிமையைப் பறைசாற்றுகின்றனர்.

வான்புகழ் வள்ளுவரின் திருக்குறள், எந்நாட்டவர்க்கும் எக்காலத்திற்கும் பொருந்தும்படியான பொதுமைக் கருத்துகளைக் கூறுவதால், 'உலகப் பொதுமறை' எனப் போற்றப்படுகிறது. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்','யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்னும் உயரிய கருத்துகளை உலகிற்கு உணர்த்தியது, நம் தமிழ்மொழி.

தமிழர்களின் விருந்தோம்பலும், ஒருவனுக்கு ஒருத்தி என்னும் பண்பாடும் உலகமே வியந்து பார்க்கும் உயர்ந்த பண்புகள். நம் பண்பாட்டின் வழி, நாம் நடப்போம்; நாளும் தமிழின் இனிமையைச் சுவைப்போம்! நன்றி, வணக்கம்.

தலைமைஆசிரியர் : நம் பள்ளி மாணவர்கள் முல்லையும் மணவாளனும் 'தமிழின் தொன்மை', 'தமிழின் இனிமை' பற்றி மிகச் சிறப்பாகப் பேசினார்கள்.

மாணவச்செல்வங்களே, நம் தமிழ்ச் செம்மொழிக்குச் சிறப்புச் சேர்க்க, குழந்தைகளுக்குத் தமிழிலேயே பெயர்சூட்ட வேண்டும். ஊர்ப்பெயர்கள், தெருப்பெயர்கள், கடைப்பெயர்கள் தமிழிலேயே அமையவேண்டும்.

ஒவ்வொருவரும் தம் பெயரின், முன் எழுத்துகளைத் தமிழிலேயே எழுத வேண்டும். கையொப்பமிடும் போதும் தமிழிலேயே இடவேண்டும்.

தமிழர்களிடம் தமிழிலேயே பேச வேண்டும். நம் எழுத்திலும் பேச்சிலும் தமிழ்மணம் கமழ வேண்டும். எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்னும் நிலை மலரப் பாடுபடவேண்டும். நன்றி, வணக்கம்!

மாணவன் அழகன் நன்றி நவில, நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது.

## பயிற்சிகள்

**I. அ. வகுப்பறையில் பேசுக.**

1. தமிழின் இலக்கிய வளம், தமிழரின் விருந்தோம்பல் போன்றவை குறித்த குறிப்புகள் எழுதி வந்து சிறு குழுவில் பேசுக.

2. பாரதியார், பாரதிதாசன் பாடல்களுள் நீ அறிந்த பாடலை ஓசை நயத்துடன் பாடுக.

**ஆ. எழுதுக.**

உன் வகுப்பில் உள்ள மாணவர்களின் பெயர்களை எழுதுக. பிறமொழி எழுத்துகள் இடம்பெறாத பெயர்களை அடிக்கோடிடுக.

**இ. அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.**

1. தொன்மை – ____________________
2. முந்தையது – ____________________
3. செம்மொழி – ____________________
4. தீந்தமிழ் – ____________________
5. காப்பியங்கள் – ____________________
6. கேளிர் – ____________________
7. பண்பாடு – ____________________
8. விருந்தோம்பல் – ____________________
9. நவிலல் – ____________________

**ஈ. பிரித்து எழுதுக.**

1. செம்மொழி = ____________________
2. ஆறாயிரம் = ____________________
3. ஒரெழுத்து = ____________________
4. தண்டமிழ் = ____________________

**உ. சேர்த்து எழுதுக.**

1. பத்து + பாட்டு = ____________________
2. தீம் + தமிழ் = ____________________
3. யாம் + அறிந்த = ____________________
4. எ + நாட்டவர்க்கும் = ____________________
5. விருந்து + ஓம்பல் = ____________________

## ஊ. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. உலகில் ____________________ மேற்பட்ட மொழிகள் உள்ளன.
2. தமிழ்மொழியின் முதல் இலக்கண நூல்______________________
3. முத்தமிழ் என்பது இயல், இசை, ____________________________
4. திருக்குறள் ____________________ எனப் போற்றப்படுகிறது.

## எ. சொற்றொடரில் அமைத்து எழுதுக.

1. இனிமை : ______________________________________________________.
2. உயர்வு : ______________________________________________________.
3. மொழி : ______________________________________________________.

## ஏ. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. விண்மீன்களைக் குறிக்காத ஒரு சொல் ____________________

   (அ) நட்சத்திரம் (ஆ) தாரகை (இ) பூமி

2. சொல்லுதல் என்னும் பொருளைக் குறிக்காத ஒரு சொல் ______________

   (அ) கூறுதல் (ஆ) மொழிதல் (இ) கேட்டல்

3. நிலவைக் குறிக்காத ஒரு சொல் ____________________

   (அ) திங்கள் (ஆ) மதி (இ) சூரியன்

## ஐ. விடை எழுதுக.

1. தமிழ் மொழி குறித்துத் தேவநேயப் பாவாணர் கூறுவது யாது ?
2. தமிழ் இலக்கியங்களின் வகைகள் சிலவற்றை எழுதுக.
3. தமிழ் மொழி எவ்வாறெல்லாம் போற்றப்படுகிறது ?
4. தமிழின் தொன்மை குறித்து எழுதுக.
5. தமிழின் இனிமையைப் பற்றிப் பாரதியார் கூறியது யாது ?

## II. அ. மரபுச்சொற்கள் அறிக.

நம் முன்னோர் ஒரு பொருளை எச்சொல்லால் எவ்வாறு வழங்கினரோ அப்பொருளை அவ்வாறே நாமும் வழங்குவது மரபு.

**1. ஒலி மரபு**

அ. பறவைகள்
1. மயில் அகவும்.
2. குயில் கூவும்.
3. கோழி கொக்கரிக்கும்.
4. சேவல் கூவும்.
5. ஆந்தை அலறும்.

ஆ. விலங்குகள்
1. யானை பிளிறும்.
2. சிங்கம் முழங்கும்.
3. நாய் குரைக்கும்.
4. குதிரை கனைக்கும்.
5. புலி உறுமும்.

**2. இளமைப்பெயர்**

1. எலி – குட்டி
2. பசு – கன்று
3. அணில் – பிள்ளை
4. சிங்கம் – குருளை
5. கோழி – குஞ்சு
6. கிளி – குஞ்சு, பிள்ளை

## ஆ. குறிப்புகளைக் கொண்டு பழமொழியைக் கண்டுபிடித்து எழுதுக.

(எ.கா.) ஓவியம் வரையவும், தமிழ்மொழியைக் கற்கவும் நல்ல பயிற்சி வேண்டும்.

பழமொழி – சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்.

1. முழுமையாகக் கற்று அறிந்தவர்கள் யாரும் இல்லை. உலகில் நாம் கற்க வேண்டியவை இன்னும் நிறைய உள்ளன.

------------------------------

2. நம் வேலைகளை நாமே செய்து கொள்ள வேண்டும்.

------------------------------

3. கடல் கடந்து சென்றும் செல்வத்தைத் தேட வேண்டும்.

------------------------------

4. நோயில்லாமல் வாழ்வது, நமக்குப் பெருஞ்செல்வம்.

------------------------------

## இ. பிறமொழிச் சொற்களை நீக்கி எழுதுக.

நான் ‘ஆண்டி’ வீட்டுக்குப் போனேன். ‘கேட்’ மூடியிருந்தது. ‘காலிங் பெல்லை’ அழுத்தினேன். ‘அங்கிள்’ வந்தார். ‘கம்மின்’ என்றார்.

------------------------------

------------------------------

## ஈ. பொருத்தமான இடங்களில் நிறுத்தக்குறி இடுக.

1. இஃது என் தமிழ்ப்பாடநூல்
2. அஃது உன் பாடநூலா
3. ஆஆ இந்த ஓவியம் எத்துணை அழகாக இருக்கிறது
4. சிறுதுளி பெருவெள்ளம் என்பது பழமொழி
5. காட்டில் மான்கள் நரிகள் புலிகள் யானைகள் முதலியவை வாழ்கின்றன

## உ. முடிவே தொடக்கம். நீங்களும் உருவாக்கலாமே.

உலகு    கும்மி    மிளகு    குளவி    விருந்து    தும்பி

கணக்கு ______________________

கரும்பு ______________________

பிறப்பு ______________________

வாழ்க தமிழ்!    வெல்க தமிழ்!

**மாணவர்மன்றம்**
**நிறைவு விழா அழைப்பிதழ்**

அன்புடையீர்,

வணக்கம். நம் பள்ளி மாணவர் மன்றத்தின் முதலாண்டு நிறைவு விழா 14-07-2012 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும். அவ்வேளையில், நம் பள்ளி மாணவர்கள் பங்கேற்கும் நாடகம் ஒன்று நடைபெறும். அனைவரும் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இப்படிக்கு,

செயலர்,
மாணவர் மன்றம்.

**நிகழ்ச்சி நிரல்**

நாள் : 14.07. 2012
நேரம் : காலை 10.00 மணி
இடம் : ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, புத்தேந்தல்.

தமிழ்த்தாய் வாழ்த்து

தலைமை : திருமதி மு. மாதவி அவர்கள், தலைமை ஆசிரியர்.

முன்னிலை : திரு. இரா. சுந்தரம் அவர்கள், தமிழாசிரியர்.

சிறப்புரை : திருமதி க. வான்மதி அவர்கள், இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை.

நாடகம் : 'ஊருக்கு நல்லது செய்வேன்', ஐந்தாம் வகுப்பு மாணவர்கள்

நன்றியுரை : கா. கவின், ஐந்தாம் வகுப்பு.

நாட்டுப்பண்

நிகழ்ச்சித் தொகுப்பாளர் :
த. முகில், ஐந்தாம் வகுப்பு.

**செயல்திட்டம் :** உன் பள்ளி ஆண்டு விழாவிற்கு அழைப்பிதழ் உருவாக்குக.

துணைப்பாடம்

# வாழ்வின் வழிகாட்டி !

பாட்டி ஏதோ ஒன்றை எழுதிக் கொண்டிருந்தாள். அதனைப் பேரன் பார்த்துக் கொண்டிருந்தான். “கதை எழுதுகிறீர்களா ? அக்கதை என்னைப் பற்றியதா ?” எனப் பேரன் வினவினான்.

பாட்டி எழுதுவதை நிறுத்திவிட்டுத் தன் பேரனைப் பார்த்து, “நான் உன்னைப் பற்றித்தான் எழுதுகின்றேன். எழுதப்படும் சொற்களைப் போல் அவற்றை எழுதும் பென்சிலும் மிகவும் முக்கியமானது. நீயும் பெரியவனான பின் இந்தப் பென்சிலைப் போல் இருப்பாய் என நான் நம்புகிறேன்” என்றார். ஆர்வமும் வியப்புமாகப் பேரன் அந்தப் பென்சிலைப் பார்த்தான். அது ஒன்றும் தனிச்சிறப்பு வாய்ந்ததாகத் தெரியவில்லை. “இந்தப் பென்சில், நான் பார்த்த மற்றப் பென்சில்கள் போலத்தானே உள்ளது” என்றான்.



“ நீ பார்க்கும் பார்வையினைப் பொருத்தே பொருள்களின் முக்கியத்துவம் இருக்கின்றது. பென்சிலுக்கு ஐந்து பண்புகள் உள்ளன. அவற்றை உன்னுள் வளர்த்துக் கொண்டால், இவ்வுலகில் நீயும் சிறப்பாக வாழலாம் ” என்றார் பாட்டி.

பாட்டி, “ பல திறமைகளை உடையவனாக நீ இருப்பினும் உன்னை வழி நடத்திச் செல்வதற்குப் பலர் உள்ளனர். அவர்கள் உன் தாய், தந்தை, ஆசிரியர்கள், பெரியோர்கள் மற்றும் நல்ல புத்தகங்கள். நல்ல பென்சிலும் எழுதுபவருக்கு உட்பட்டு, அவர் நினைக்கும் வழி செல்கின்றது. அதுபோல், உன்னை வழி நடத்துபவரின் சொற்களைக் கேட்டு நீயும் நடக்க வேண்டும். இது முதல் பண்பு.

நான் பென்சிலின் கூர்மை மழுங்கும் போதெல்லாம், அதனைக் கூர்மைப் படுத்துகின்றேன். அதனால், பென்சில் துன்பத்திற்கு உட்படுகின்றது. ஆனால், அது கூர்மையாக்கப்பட்டுத் திறம்படச் செயலாற்ற, தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்கின்றது. அதுபோல நீயும் சில தோல்விகள், துன்பங்களைத் தாங்கிக் கொள்ளக் கற்றுக்கொண்டால், நன்கு பக்குவப்பட்டுச் சிறந்தவனாக ஆவாய். இது இரண்டாவது பண்பு.

ஏதேனும் தவறுதலாகப் பென்சிலால் எழுதிவிட்டால் அழிப்பான் கொண்டு அழிக்கின்றோம். இதற்குப் பென்சில் அனுமதிக்கின்றது. தவற்றைத் திருத்திக் கொள்வது ஒருகுறை அன்று. நீதியையும் நேர்மையையும் நிலைநாட்டத் தவறுகளைத் திருத்திக் கொள்வது தேவையாகின்றது. இது மூன்றாவது பண்பு.

மரத்தாலான பல்வேறு வண்ணங்கள் பூசப்பட்ட பென்சிலின் வெளித் தோற்றத்தைவிட, அதன் உள்ளே உள்ள கரிமம் (கிராபைட்) முக்கியமானது. அதுபோல், நீயும் உன் மனத்துள் என்ன நிகழ்கிறது என்பதைக் கவனிப்பதில் கருத்தினைச் செலுத்துதல் வேண்டும். இது நான்காவது பண்பு.

பென்சில், தான் எழுதும் தாளில் தன்னுடைய சுவட்டினை முத்திரையாகப் பதித்துவிட்டுச் செல்கின்றது. அதுபோல, உன் வாழ்வில் செய்யும் ஒவ்வொரு செயலும் உன் தனித்தன்மையையும் முத்திரையையும் பதித்துப் பெயர் சொல்லும்படி இருக்க வேண்டும். ஆகவே, உன்னுடைய ஒவ்வொரு செயலையும் கவனத்துடன் மேற்கொள்ள வேண்டும். இது ஐந்தாவது பண்பு” என்று விளக்கினார்.

“ பாட்டி, நான் இப்போது பென்சிலின் பண்புகளைப் புரிந்து கொண்டேன்!” என்றான் பேரன்.

# நீதிநெறி விளக்கம்

செய்யுள் இயல் –3

1. முற்றும் உணர்ந்தவர் இல்லை, முழுவதூஉம்
கற்றனம் என்று களியற்க – சிற்றுளியால்
கல்லும் தகரும் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால். *

பாடல்பொருள்: பொன்னாலான காதணிகளை அணிந்த பெண்ணே! உலகில் முழுமையாகக் கற்று உணர்ந்தவர் எவரும் இல்லை. ஆகையால், அனைத்தையும் கற்றுத் தேர்ந்துவிட்டோம் என ஒருவன் செருக்கு கொள்ளக்கூடாது; ஏனெனில், கொல்லன் உலைச்சம்மட்டியால் உடைபடாத பெரிய மலையைச் சிறிய உளி தகர்த்துவிடும்.

சொல்பொருள்:

முற்றும் உணர்ந்தவர் – முழுமையாகக் கற்று உணர்ந்தவர்
கற்றனம் – கற்றுவிட்டோம்
களியற்க – செருக்குக் கொள்ளக்கூடாது
கனங்குழாய் – பொன்னாலான காதணிகளை அணிந்த பெண்ணே
தகரும் – உடைபடும்
கொல்லுலை – கொல்லன் உலை

2. வாங்கும் கவளத்து ஒருசிறிது வாய்தப்பின்
தூங்கும் களிறோ துயர்உறா – ஆங்கதுகொண்டு
ஊரும் எறும்புஇங்கு ஒருகோடி உய்யுமால்
ஆரும் கிளையோடு அயின்று.

பாடல்பொருள் : அசைந்து கொண்டிருக்கும் யானைகள், தாம் உண்ணும் உணவில் வாயினின்று தவறிச் சிறிது விழுந்துவிட்டால், அதற்காக அவை வருந்துவதில்லை. அவ்வாறு சிந்திய உணவை, அங்கு ஊர்ந்து செல்லும் ஒருகோடி எறும்புகள், தம் சுற்றம் சூழ உண்டு வாழும். ஒருவர், தம்மிடம் உள்ள செல்வத்தின் சிறு பகுதியைப் பிறருக்குப் பயன்படும்படி செலவு செய்வதனால் பலரும் பயன் பெறுவர்.

**சொல்பொருள் :**



| | | |
|---|---|---|
| கவளம் | – | சோற்று உருண்டை |
| தூங்கும் | – | அசைந்து கொண்டிருக்கும் |
| களிறு | – | ஆண் யானை |
| துயர்உறா | – | வருத்தம் அடைவதில்லை |
| உய்யும் | – | வாழும் |
| ஆரும் | – | நிறைவுபெறும் |
| கிளையோடு | – | சுற்றத்தாரோடு |
| அயின்று | – | உணவாக உண்டு |

3. மெய்வருத்தம் பாரார்; பசிநோக்கார்; கண்துஞ்சார்;
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்; – செவ்வி
அருமையும் பாரார்; அவமதிப்பும் கொள்ளார்;
கருமமே கண்ணாயி னார். *

**பாடல்பொருள் :**

தாம் மேற்கொண்ட செயலில் கண்ணும் கருத்துமாக இருப்பவர்கள், உடல் வருத்தம், பசி, உறக்கம், பிறர்செய்யும் தீமைகள், காலத்தின் அருமை, பிறரால் ஏற்படும் இழுக்குகள் ஆகியவற்றைப் பொருட்படுத்த மாட்டார்கள்.

**சொல்பொருள் :**

| | | |
|---|---|---|
| மெய் | – | உடல் |
| செவ்வி | – | காலம் |
| துஞ்சார் | – | உறங்கமாட்டார் |

**ஆசிரியர் குறிப்பு :**

| | | |
|---|---|---|
| பெயர் | – | குமரகுருபரர் |
| ஊர் | – | தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள திருவைகுண்டம் |
| பெற்றோர் | – | சண்முக சிகாமணிக் கவிராயர், சிவகாம சுந்தரி |
| சிறப்பு | – | இளமையிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றவர் |
| காலம் | – | 17ஆம் நூற்றாண்டு |



குமரகுருபரர்

## பயிற்சிகள்

### அ. வகுப்பறையில் பேசுக.

1. கல்விச் செல்வம், பொருட்செல்வம் இவற்றுள் நீ எந்தச்செல்வத்தை உயர்வாக எண்ணுகிறாய் ? சிறு குழுவில் உரையாடுக.

### ஆ.பிரித்து எழுதுக.

1. சிற்றுளி = ____________________
2. கொல்லுலை = ____________________
3. ஆங்கது = ____________________
4. கண்ணாயினார் = ____________________
5. நல்வழி = ____________________

### இ. எதிர்ச்சொல் எழுதுக.

1. குறை x ____________________
2. தகரும் x ____________________
3. நல்வழி x ____________________
4. விழிப்பு x ____________________
5. கவலை x ____________________

### ஈ. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. உறக்கம் என்பதைக் குறிக்கும் சொல்

   ( அ ) விழிப்பு ( ஆ ) துயில் ( இ ) எழுதல்

2. குழை என்பதன் பொருள்

   ( அ ) செவி ( ஆ ) காதணி ( இ ) அணிகலன்

3. கவளம் என்பதன் பொருள்

   ( அ ) சோற்று உருண்டை ( ஆ ) காய்கனி ( இ ) இலை, தழை

### உ. விடை எழுதுக.

1. முழுவதும் கற்றுவிட்டோம் எனச் செருக்கடையக் கூடாது. ஏன் ?
2. யானை உண்ணும்போது சிந்தும் உணவு எதற்குப் பயன்படுகிறது ?
3. ஒரு செயலில் ஈடுபடுபவர் எவற்றைப் பொருட்படுத்த மாட்டார் ?

# நெஞ்சை அள்ளும் தஞ்சைப் பெரிய கோவில்

## ( கடிதம் )

58 , கலைமகள் நகர்,

காரைக்குடி,

01.10.2011.

அன்புத்தோழி அமுதா!

நலம். நலமறிய ஆவல். நாங்கள் காலாண்டு விடுமுறையில் தஞ்சாவூரில் உள்ள அத்தை வீட்டிற்குப் பேருந்தில் புறப்பட்டோம். தமிழகத்தின் நெற்களஞ்சியமாம் காவிரி பாயும் தஞ்சைத் தரணியில் பார்க்கும் இடமெல்லாம் வயல்கள்; பச்சைப்பசேல் எனத் தலையசைத்து ஆடும் நெற்பயிர்கள்; நெற்கதிர்களைக் கொத்தித் தின்னக் கூடும் குருவிக்கூட்டங்கள்; ஆங்காங்கே நீர் நிலைகளில் பூத்துக்குலுங்கும் தாமரை, அல்லி மலர்கள். அவை மனத்திற்கு மகிழ்ச்சியைத் தந்தன. மாமாவும் அத்தையும் பேருந்து நிலையத்தில் எங்களை வரவேற்று வீட்டிற்கு அழைத்துச் சென்றனர்.



மறுநாள், அவர்கள் எங்களைத் தஞ்சைப் பெரியகோவிலுக்கு அழைத்துச் சென்றார்கள். கோவிலைத் தொலைவில் இருந்து பார்த்தபோதே மனத்தில் மகிழ்ச்சி ஏற்பட்டது. “இக்கோவில் இராசராச சோழனால் கட்டப்பட்டது; நாம் காண்பது கேரளாந்தகன் திருவாயில்” என்று மாமா கூறினார். அங்கு, ஒரே கல்லால் ஆன மிக உயரமான இரு தூண்கள் இருப்பது மிகவும் அருமை.



வாயிலின்மேல் ஐந்துநிலைகள் உடைய கருங்கல் கோபுரம் செம்மாந்து நிற்கிறது. இதுதான் தமிழகத்தில் எழுப்பப்பட்ட உயரமான முதற்கோபுரமாம். கோபுரத்தில் தெய்வச்சிற்பங்கள், விலங்குகள் என அனைத்தும் உயிருள்ளவை போன்று காட்சியளிக்கின்றன.

அடுத்த வாயில், 'இராசராசன் திருவாயில்' என்றார் மாமா. அது மூன்று நிலை உடைய கருங்கல் கோபுரம். அந்நுழைவாயிலின் இருபுறமும் எழில்மிகு மிகப் பெரிய துவாரபாலகர் சிற்பங்கள். அவற்றுள், இடப்புறம் உள்ள சிற்பம் கற்பனையின் சிகரம் எனலாம்.

துவாரபாலகரின் வலக்கால், 'கதை' என்னும் ஆயுதத்தின்மேல் அழுந்தி உள்ளது. அதைச் சுற்றியுள்ள பெரிய பாம்பு ஒன்று, யானையை விழுங்குவது போன்ற சிற்பம். யானையையே விழுங்கும் பாம்பு எவ்வளவு பெரியதாக இருக்க வேண்டும். அப்பாம்பை மிதிக்கும் துவாரபாலகர் எவ்வளவு வலிமை வாய்ந்தவராக இருக்க வேண்டும். அத் துவாரபாலகர் வணங்கும் இறைவன் எவ்வளவு ஆற்றல் மிக்கவராக இருத்தல் வேண்டும்; நினைத்துப் பார்த்தேன். எனக்கு வியப்பாக இருந்தது.



கோபுரத்தில் அமைந்துள்ள சிற்பங்கள் உயிர் ஓவியங்களாகக் காட்சி அளிக்கின்றன. காட்சிக்கும் கருத்துக்கும் சிறப்பளிக்கும் வகையில் அனைத்துச் சிற்பங்களையும் அமைத்துள்ளார் மன்னன் இராசராசன். அவை புராண நிகழ்வுகளைக் கண்முன் காட்டுகின்றன.

கோவிலின் உள்ளே ஒரே கல்லால் ஆன மிகப்பெரிய நந்தியைக் கண்டேன். இந்த நந்தி விந்தையிலும் விந்தையானது! அதனருகே நான் நின்றபோது என் உயரம் மிகவும் குட்டையாக இருந்ததை உணர்ந்தேன்.



கோபுரத்தை அண்ணாந்து பார்த்தேன். அக்கோபுரத்தைத் திருவிமானம் என்றும் கூறுவர். அதன் உச்சியில் மிகப்பெரிய உருண்டை வடிவக்கல்லைக் கண்டேன் . "அந்தக்கல் எண்பத்தொரு 'டன்' எடை கொண்டது" என்று மாமா கூறினார். அக்காலத்தில், இவ்வளவு பெரிய கல்லை அவ்வளவு உயரத்திற்கு எப்படிக் கொண்டு சென்றார்கள் என்று வியந்து நின்றேன். அத்திருவிமானத்தின் கீழே இறைவன் இருக்கும் கருவறை உள்ளது.

"கோவிலில் உள்ள எழில்மிகு ஓவியங்கள் அனைத்தும் இலைகள், பூக்களைக்கொண்டு செய்த இயற்கை வண்ணங்களால் தீட்டப்பட்டவை" என்றார் ஒருவர். அர்த்த மண்டபத்தின் உள்ளே இராசராசன் சிற்பம் உள்ளது. அச்சிற்பத்தைச் சுற்றிலும் நடன நங்கைகள் நளினத்துடன் ஆடும் சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. இவற்றை நினைத்துப் பார்க்கும்போது நாட்டியக்கலைமீது இராசராசனுக்கு இருந்த பெருவிருப்பத்தை அறிந்தேன்.



கோவிலின் பக்கவாட்டுச் சுவரில் நாட்டியக்கலையில் உள்ள ஆடல்வகைகளை விளக்கும் சிற்பங்கள்! இவை அனைத்தையும் பார்த்து மகிழ்ந்தேன். என்னைப்போலவே வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் நம் கட்டடக் கலையையும் சிற்பக் கலையையும் கண்டு களித்தனர்.



சோழர் கால ஓவியம் – சனகாதி முனிவர்கள்

எனக்குக் கோவிலை விட்டுவரவே மனம் இல்லை. மீண்டும் மீண்டும் பார்த்தேன். மாமா, "இக்கோவிலைக் கட்டி ஆயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டன" என்றார்.

அப்படியா! நம் முன்னோரின் கலைத்திறனையும் கட்டடக் கலையையும் எண்ணியெண்ணி வியந்தேன்.

ஆயிரம் ஆண்டுகளைக் கடந்தும் நிமிர்ந்து நிற்கும் தஞ்சைப் பெரிய கோவிலைக் காண எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது. இக்கோவிலைப் பற்றி மேலும் பல செய்திகளை நேரில் வந்து கூறுகிறேன்.

இப்படிக்கு,
உன் அன்புத் தோழி,
த. தமிழ்ச்செல்வி.

உறைமேல் முகவரி

அ. அமுத யாழினி,
த/பெ. அருண்மொழி,
115, பெரிய கடைவீதி,
நீலாம்பூர்,
கோவை – 641062.

தஞ்சை மாவட்டத்தில் மலைகளோ பாறைகளோ இல்லை. ஆகையால் புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார்கோவில், நார்த்தாமலை முதலிய இடங்களில் இருந்து கற்களும் பாறைகளும் கொண்டுவரப்பட்டுத் தஞ்சைப் பெரியகோவில் கட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் கல்வி அறிவியல் பண்பாட்டு நிறுவனம், 1987ஆம் ஆண்டு தஞ்சைப் பெரிய கோவிலை ‘உலகப் பாரம்பரியச் சின்னமாக’ அறிவித்துள்ளது.

கி.பி. 1010ஆம் ஆண்டு தஞ்சைப் பெரியகோவிலுக்குக் குடமுழுக்கு நடைபெற்றது. 2010 ஆம் ஆண்டில் ஆயிரம் ஆண்டுகள் நிறைவடைந்தன.

# தஞ்சைப் பெரிய கோவில் ஆயிரமாவது ஆண்டு நிறைவுவிழாக் காட்சிப்படங்கள்









விழாவில் வெளியிடப்பட்ட சிறப்பு அஞ்சல் தலை , சிறப்பு நாணயம் .



களிமேடு கிராமத்தினர் வழங்கிய திருமுறை ஓதுதல்.



விழாவில் இடம் பெற்ற கும்மி நடனம்.



விழா மேடையில் இடம் பெற்றிருந்த மாமன்னன் இராசராசன் சிலை.



முனைவர் பத்மா சுப்பிரமணியம் குழுவினரது நடனம்.

## பயிற்சிகள்

### I. அ. வகுப்பறையில் பேசுக.

உன் ஊரிலுள்ள கோவில்களின் பெயர்களைக் கூறுக. அவற்றின் அமைப்பைப் பற்றி விவரிக்க.

### ஆ. எழுதுக.

1. உன் மனம் கவர்ந்த இடம் அல்லது நீ விரும்பும் பொருளைப் பற்றி உன் தோழிக்கு / தோழனுக்குக் கடிதம் எழுதுக.
2. உன் ஊர்த்திருவிழாவிற்கு அழைப்பு விடுத்து உறவினர்க்குக் கடிதம் எழுதுக.
3. பாட நூலில் இடம்பெற்றுள்ள கடிதத்திற்கு மறு மடல் எழுதுக.

### இ. அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

1. களஞ்சியம் – ______________________
2. தரணி – ______________________
3. டன் – ______________________

### ஈ. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. கோவிலைக் குறிக்கும் வேறு சொல் __________
   ( அ ) இல்லம் ( ஆ ) ஆலயம் ( இ ) சத்திரம்
2. நாட்டியத்தைக் குறிக்கும் வேறு சொல் __________
   ( அ ) நாடகம் ( ஆ ) நடனம் ( இ ) பாடல்
3. ஓவியத்தைக் குறிக்கும் வேறு சொல் __________
   ( அ ) வண்ணம் ( ஆ ) சிற்பம் ( இ ) சித்திரம்
4. யானையைக் குறிக்கும் வேறு சொல் __________
   ( அ ) பரி ( ஆ ) மந்தி ( இ ) கரி



### உ. விடை எழுதுக.

1. இராசராசன் வாயிலின் சிறப்பு யாது ?
2. கோவிலில் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ள உருவங்கள் எவை ?
3. தஞ்சைக் கோவிலில் உள்ள நந்திச்சிலை பற்றி எழுதுக.
4. தஞ்சைக் கோவிலின் அமைப்புப் பற்றி எழுதுக.

## II.அ. இணைச் சொற்களை அறிக.

1. என் தாய் என்னைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்தார்.
2. அமலநாதன் நன்றாகப் படித்துப் பேரும் புகழும் பெற்றான்.
3. மூங்கில் மரங்கள் ஓங்கி உயர்ந்து வளர்ந்திருந்தன.

வண்ண எழுத்தில் உள்ள சொற்கள் இரண்டும் ஒரே பொருளைத் தந்து கருத்தை வலுப்படுத்துகின்றன. இவற்றை நேரிணை என்கிறோம்.

1. குழந்தை இங்கும் அங்கும் ஓடி விளையாடியது.
2. நண்பர்களின் இன்ப துன்பங்களில் நாம் பங்கெடுக்க வேண்டும்.
3. நாம் அனைவரிடமும் விருப்பு வெறுப்பு இன்றி நடந்துகொள்ள வேண்டும்.

வண்ண எழுத்தில் உள்ள சொற்கள் எதிர்ச்சொற்களாக அமைந்து கருத்துக்கு வலுச்சேர்க்கின்றன. எனவே, இவற்றை எதிரிணை என்கிறோம்.

1. தஞ்சையில் நெல்வயல்கள் பச்சைப் பசேல் எனக் காணப்படுகின்றன.
2. கிளியின் மூக்குச் செக்கச் செவேல் என இருக்கும்.
3. முயல் வெள்ளை வெளேரென இருந்தது.

வண்ண எழுத்தில் உள்ள சொற்கள் வண்ணத்தின் செறிவினை (அடர்த்தியை) வலுப்படுத்துகின்றன. இவற்றைச் செறியிணை என்கிறோம்.

இணைச்சொற்கள் – நேரிணை, எதிரிணை, செறியிணை என மூவகைப்படும்

## ஆ. பின்வரும் சொற்களைப் பொருத்தமான கட்டத்தில் எடுத்து எழுதுக.

கன்னங்கரேல், கண்ணும் கருத்துமாக, இன்ப துன்பம், சீரும் சிறப்பும், வெற்றி தோல்வி, ஒப்பாரும் மிக்காரும், அன்றும் இன்றும், தன்னந்தனியாக.

| நேரிணை | எதிரிணை | செறியிணை |
|---|---|---|
| | | |

இ. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

சிபி அறைக்குள் வந்தான். கூண்டுக்குள் இருந்த கிளி, படபடவெனச் சிறகுகளை அடித்தது; 'கீ, கீ' எனக் கத்தியது; அதன் காலில் கட்டுப் போடப்பட்டிருந்தது. அதன் அருகில் சென்றவன், சில மிளகாய்ப் பழங்களைக் கூண்டுக்குள் வைத்தான்.



"கொஞ்சம் பொறுத்துக்கொள். ஓரிரண்டு நாளில் நீ விடுதலையாகிப் பறக்கலாம்'', என அன்போடு கூறினான்.

அப்பொழுது, அங்குக் கறுப்பு நிறப் பூனை ஒன்று வந்தது.

அது 'மியாவ்' எனக் கத்தியது; அவன் கால்களை உரசியவாறே சுற்றிச்சுற்றி வந்தது.

" உனக்கும் பசிக்கிறதா ? இரு, வருகிறேன். பால் சூடு ஆற வேண்டாமா ?'' எனப் பூனையைச் செல்லமாய்த் தடவியவாறே கூறினான்.

விடை தருக.

1. கிளி, படபட வெனச் சிறகடித்துக் கத்தியது. எனவே, சிபி ________________
2. கிளியினால் பறக்கமுடியாது; ஏனெனில், ________________
3. சிபி, கிளியைக் கூண்டுக்குள் அடைத்துள்ளான்; ஏனெனில், ______________
4. பூனைக்குப் பசி; எனவே, ________________
5. சிபி, பூனைக்குப் பால் தரவில்லை; ஏனெனில், ________________
6. சிபி, கிளியை வளர்க்கிறானா ?
7. சிபியின் இயல்பு பற்றி எழுதுக.

ஈ. துண்டு வெளியீட்டைப் படிக்கவும்.

நீங்கள் பள்ளி செல்லும் மாணவரா ? வேலை தேடுபவரா ?
கணினி கற்க விருப்பமா ?
**முத்து கணினிப் பயிற்சி மையம்**
6 வயதுமுதல் அனைவரும் சேரலாம்.
பயிற்சி மையம் : 115, அன்னூர் முதன்மைச் சாலை,
கூட்டுறவு வங்கி அருகில், தென்னம்பாளையம்.
பயிற்சி நேரம் : காலை 8 மணிமுதல் இரவு 10 மணிவரை
திறப்பு விழா : 2012 மே 2, புதன்கிழமை
திறப்பு விழாச் சலுகை: கட்டணத்தில் 10% கழிவு.
குறைந்த கட்டணம் ! நிறைந்த பயிற்சி !

விடை கூறுக.

1. துண்டு வெளியீடு எதனைப் பற்றியது ?
2. பயிற்சி மையத்தின் பெயர் என்ன ?
3. பயிற்சியில் சேர வயது வரம்பு உள்ளதா ?
4. மையம், எதன் அருகில் உள்ளது ?
5. திறப்பு விழாவுக்கு நீ செல்வாயா ?

உ. புதிர்களுக்கு விடை கூறுக.

1. ஆயிரம் காய் காய்க்கும்; ஆனால், ஒன்றுகூடக் கனியாகாது. அஃது என்ன ?
2. ஆனை விரும்பும் சேனை விரும்பும்; அடித்தால் வலிக்கும் கடித்தால் இனிக்கும். அஃது என்ன ?
3. சின்னஞ்சிறு கதவுகள், செய்யாத கதவுகள், திறந்தாலும் மூடினாலும் சத்தம் செய்யாத கதவுகள். அவை என்ன ?
4. தண்ணீரில் விளைந்தவன் மழைநீரில் கரைகிறான். அவன் யார் ?



5. உமிபோலப் பூப்பூக்கும் சிமிழ்போலக் காய்காய்க்கும். அஃது என்ன ?
6. இடி இடிக்கும்; மின்னல் மின்னும்; ஆனால், மழை பெய்யாது. அஃது என்ன ?
7. வளைந்து நெளிந்து செல்லும் இது, நிலத்தை வளப்படுத்தும். அஃது என்ன ?
8. வளைந்து வளைந்து செல்பவன் – உன்னை விரும்பும் ஊரில் சேர்ப்பான். அவன் யார் ?
9. காக்கைபோலக் கறுப்பு நிறம்; கையில் தொட்டால் ஊதா நிறம்; வாயில் போட்டால் நீல நிறம்; சுவைத்தால் இனிக்கும் பழம். அஃது என்ன ?

ஊ. படிப்போம்! எழுதுவோம்!

## இனியனின் நாள்குறிப்பு

04 – சூன் – 2010 – வெள்ளி.

இன்று காலையில் நண்பனுடன் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தேன். வழியில் மூன்றாம் வகுப்பில் படிக்கும் கந்தன் அழுதபடி நின்று கொண்டிருந்தான்.

நாங்கள் அவனைப் பார்த்து, “கந்தா. . . ஏன் அழுகிறாய் ?” என்று கேட்டோம். பென்சில் வாங்குவதற்காக அப்பா கொடுத்த ஐந்துரூபாய்க் காசைக் காணவில்லை”, என்று கூறி மீண்டும் அழத்தொடங்கினான்.

“ஐந்துரூபாயை எங்கே வைத்தாய் ?”, என்று கேட்டோம். அதற்குக் கந்தன், “எனது சட்டைப் பையில்தான் வைத்தேன்” என்றான். நாங்கள், அவன் சட்டைப் பையைப் பார்த்தோம். பையில் சிறிய ஓட்டை இருந்தது. அந்த ஓட்டை வழியாகத்தான் காசு விழுந்திருக்கும் என்று முடிவு செய்தோம். எப்படியாவது கந்தனின் அழுகையை நிறுத்த நினைத்தோம். வீட்டில் எங்களுக்குக் கொடுத்த காசுகளைத் திரட்டினோம். அவனுக்குப் பென்சில் வாங்கித்தர முடிவு செய்தோம்.

அந்த நேரத்தில் நான்காம் வகுப்பில் படிக்கும் முத்து, அங்கு வந்தான். பள்ளிக்கு வரும் வழியில் ஐந்துரூபாய்க்காசு ஒன்று கிடைத்ததாகச் சொன்னான். “அப்படியா! அந்தக் காசு, கந்தனுக்கு அவன் தந்தை 'பென்சில்' வாங்குவதற்குக் கொடுத்தது” என்று கூறினோம். உடனே, முத்து அந்த ஐந்துரூபாயைக் கந்தனிடம் கொடுத்தான். முத்துவின் நேர்மையான உள்ளம் எங்களை மிகவும் கவர்ந்தது. முத்துவுக்கு நன்றி கூறினோம்.



கந்தனுக்கு நல்ல பென்சில் ஒன்றை வாங்கிக் கொடுத்தோம். கந்தனின் அழுகை நின்றது; முகத்தில் மலர்ச்சி தோன்றியது. தானாகவே முன்வந்து உதவும் நண்பர்களைப் பெற்றிருக்கின்றேன் என்னும் உணர்வு என்னை நெகிழச் செய்தது. இந்த நட்பு என்றென்றும் தொடர வேண்டுமென விரும்புகின்றேன்.

இந்நாள் என்வாழ்வில் மறக்க முடியாத ஓர் இனிய நன்னாளாகும்.

நீ, நாட்குறிப்பு எழுதியது உண்டா ? இல்லையெனில், இதுபோன்று இன்று முதல், நாட்குறிப்பு எழுதிப் பழகுக.... தொடர்ந்து எழுதுக.

எ. வகுப்பறையில் எழுதுக.

உன் வாழ்வில் நிகழ்ந்த இனிமையான ஒரு செய்தியைப் பற்றி எழுதுக.

ஏ. கீழுள்ளவர்கள் போல் வகுப்பில் நடித்துக் காட்டுக.

ஓட்டுநர், நடத்துநர், மருத்துவர், ஆசிரியர், பூ விற்பவர், காய் விற்பவர்.

ஐ. பத்தியைப் படித்துத் தேவையான இடங்களில் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

முத்து இன்று ஏன் பள்ளிக்கு வரவில்லை ஊருக்குச் சென்றிருப்பானோ உடல் நலமில்லையோ அவன் எவ்வளவு நல்லவன் நாளையாவது வருவானா ஓயாமல் ஒலித்தது பேருந்தின் ஒலிப்பான் என்ன நடந்தது பின்னால் திரும்பிப் பார்த்தேன் பேருந்து சிற்றுந்து மகிழுந்து என அனைத்தும் வரிசையில் நீண்டு நின்றன ஏனெனில் மாடுகள் பல சாலையின் நடுவில் படுத்திருந்தன

ஒ. படத்தைப் பார், பாடல் எழுதுக.

பார் பார் தொட்டியைப் பார்
தொட்டியின் மேலே செடியைப் பார்
செடியின் மேலே ________________

________________________________
________________________________
________________________________
________________________________
________________________________



## செயல் திட்டம்

- உன் ஊரில் உள்ள கோவில்களின் சிறப்புகளைத் தொகுத்து எழுதுக.
- உன் ஊரில் விளையாடும்போது பாடப்படும் பாடல்களைத் திரட்டி வருக.

  (எ.கா.) குலை குலையாய் முந்திரிக்காய்...
- சிறுவர்இதழ்களில் வரும் அறநெறிக் கதைகளைத் தொகுத்து, கதைத் தொகுப்பு ஒன்று உருவாக்குக.

துணைப்பாடம்

# மூன்று பொற்காசுகள்

இயல் –3

நாகப்பன் பெருஞ்செல்வர். அவர், தன்னிடம் வேலையில் சேர்பவர்களுக்கு ஆண்டு முடிவில் மூன்று பொற்காசுகள் ஊதியமாக வழங்குவார். அதற்குமுன் அறிவைச் சோதிப்பதற்கு மூன்று செயல்களைக் கொடுப்பார். அவற்றைச் சரியாகச் செய்து முடிக்க வேண்டும். இல்லையெனில், ஒவ்வொரு செயலுக்கும் ஊதியத்திலிருந்து ஒரு பொற்காசைக் குறைத்துக் கொள்வார்.

இதனை ஒப்புக்கொள்பவரையே வேலையில் சேர்த்துக் கொள்வார். நாகப்பனிடம் வேலையில் சேர்ந்த எவரும் இதுவரை ஊதியம் பெற்றதில்லை. ஏனெனில், ஆண்டு முடிவில் அவர் தரும் செயல்களைச் செய்ய முடியாமல் தோல்வியடைந்து சென்றுவிடுவர். இவ்வாறாக, நாகப்பன் வேலையாள்களுக்கு ஊதியம் தராமல் ஏமாற்றி வந்தார்.

நாகப்பனின் ஏமாற்றும் எண்ணத்தை அறிந்த அறிவுநம்பி அவருக்குப் பாடம் புகட்ட எண்ணினான். நாகப்பனின் விதிகளை ஒப்புக்கொண்டு அறிவுநம்பி வேலையில் சேர்ந்தான். ஓராண்டு முடிவில், "ஐயா, நான் பணியில் சேர்ந்து இன்றோடு ஓராண்டு நிறைவடைகிறது; ஊதியம் வேண்டும்" என்றான். "அப்படியா! விதிகள் உனக்கு நினைவிருக்கிறதா ?" என்று கேட்டார் நாகப்பன்.

அறிவுநம்பி, "ஐயா, நன்றாக நினைவிருக்கிறது" என்றான். " இவ்வூரில் எத்தனை காகங்கள் இருக்கின்றன ? எண்ணிச்சொல். இதுதான் முதல் வேலை", என்றார் நாகப்பன். " ஆயிரத்துப்பத்து" என்றான் அறிவுநம்பி.




உடனடி பதிலைக் கேட்ட நாகப்பன், சற்றே அதிர்ச்சியடைந்து "அது எப்படி ?" என்றார். அறிவுநம்பி சற்றும் தயங்காமல், "ஐயமிருந்தால் காகங்களை எண்ணிப்பாருங்கள்" எனச் சிரித்துக் கொண்டே சொன்னான். "ஆயிரத்துப்பத்துக் காகங்களைவிட அதிகமாக இருந்தால் என்ன செய்வது"? என்று கேட்டார் நாகப்பன்.



“அதிகமாக இருந்தால் அவை வெளியூரில் இருந்து வந்தவையாக இருக்கும்” என்றான் அறிவுநம்பி. “எண்ணிக்கை குறைவாக இருந்தால்” என்று நாகப்பன் கேட்டவுடன், “இங்குள்ளவை வெளியூருக்குச் சென்றிருக்கும்” என்று கூறிக் கலகலவெனச் சிரித்தான் அறிவுநம்பி.

“அப்படியா! அடுத்தவேலை, இந்த அறைக்குள் இருக்கும் நெல்லைக் காயவைக்க வேண்டும். வெளியில் எடுத்துச் செல்லக் கூடாது” என்றார். “இதோ ஒரு நொடியில் முடிக்கிறேன்” என்று கூறிய அறிவுநம்பி, மடமடவென வீட்டின் கூரை மேல் ஏறினான்; கூரையைப் பிரித்தான்; கதிரவனின் வெப்பம் வீட்டிற்குள் இருந்த நெல்லின்மீது விழுந்தது. “ஐயோ! கூரை.. கூரை...”என்று பதறினார் நாகப்பன். “ஐயா, நீங்கள் கூறியபடியே அறைக்குள்ளேயே நெல்லைக் காய வைத்துள்ளேன்” என்றான் அறிவுநம்பி. நாகப்பன் பற்களை நறநறவெனக் கடித்தார்.



மூன்றாவது வேலையை இவனால் செய்யவே முடியாது என முடிவு செய்தார். அறிவுநம்பியைப் பார்த்து, “என் தலையின் எடை என்ன? சரியாகக் கூறு” என்றார். அறிவுநம்பி சற்றுச் சிந்தித்தான்; நாகப்பனின் தலையை உற்று நோக்கினான்; விரைவாகத் தோட்டத்திற்குச் சென்றான். பூசணிக்காய் ஒன்றைப் பறித்து வந்தான். “ஐயா, உங்கள் தலையின் எடையும் இப்பூசணிக்காயின் எடையும் ஒன்றுதான்” என்றான். “அது எப்படி ஒன்றாகும்” என்றார் நாகப்பன். “இதோ! தராசு இருக்கிறது. ஒரு தட்டில் பூசணிக்காயை வைக்கிறேன். ஐயம் இருந்தால் சரிபார்த்துக்கொள்ளுங்கள்” என்றான். நாகப்பன் தன் தலையை நினைத்துப்பார்த்தார். தன் தவற்றை உணர்ந்தார்.

“இனிமேல் யாரையும் ஏமாற்ற மாட்டேன்” எனக்கூறி, அறிவுநம்பிக்கு மூன்று பொற்காசுகளைக் கொடுத்தார்.

**சிந்திக்க**

1. நாகப்பனின் ஏமாற்றும் எண்ணத்தைப் பற்றி உன் கருத்தைக் கூறுக.
2. அறிவுநம்பியின் செயல்கள் சரியென்று கருதுகிறாயா?

# 4. அகரமுதலி

அச்சாணி – கடையாணி
அடைமொழி – சிறப்புச் சொல்
அமிலப்புகை – நச்சுக் கலந்த புகை
அரிது – இயலாது
அல்லார் – அல்லாதவர்
அளப்பரிய – எல்லையற்ற
ஆர்ப்பரிக்கும் – பேரொலி எழுப்பும்
ஆன்ற – நிறைந்த
எழில் – அழகு
ஓங்கி – உயர்ந்த
ஓம்புவான் – பாதுகாப்பவன்
கருவூலம் – சேமிக்கும் இடம்
களஞ்சியம் – பொருள் நிறைந்த இடம்
காப்பியங்கள் – கதைத் தொடர்நிலைச் செய்யுள்
குழையும் – வாடும்
கேளிர் – உறவினர்
சிறுமை – கீழ்மை, வறுமை
செம்மாந்து – இறுமாந்து,
செம்மொழி – செம்மையான மொழி
செவ்வியல் – அழகிய, தகுதியான
ஞாலம் – உலகம்
டன் – ஆயிரம் கிலோ
தரணி – உலகம்
தழைத்திட – பெருகிட, மிகுந்திட
திரிந்து – மாறுபட்டு
திரு – அழகு
தீந்தமிழ் – இனிமையான தமிழ்
துவாரபாலகர் – வாயிற் காவலர்

தொழுதல் – வணங்குதல்
தொன்மை – பழைமை
நந்தி – காளை, எருது
நல்கியது – கொடுத்தது
நவிலல் – கூறுதல்
நுண்மை – நுட்பம், கூர்மை, மிகச்சிறியது
நெடிதுயர்ந்த – உயரமாக வளர்ந்த
நோக்க – பார்க்க
பண்பாடு – ஒழுக்கம்
பருவந்து – துன்பம் வந்து
பாழ்படுதல் – வீணாதல்
புராணம் – பழங்கதை, பழைய நிகழ்வு
பொதுமை – பொதுத்தன்மை
முகடு – உச்சி, உயர்வு, வீட்டின்மேற்கூரை
முத்திரை – அடையாளம், இலச்சினை
முந்தையது – முற்பட்டது
மூலிகை – மருத்துவக் குணம் நிறைந்த செடி, கொடிகள்
மோப்ப – முகர்தல்
வழிமொழிதல் – ஒப்புக்கொள்ளல்
விசும்பு – வானம்
விந்தை – வியப்பு, அழகு, வேடிக்கை
விருந்தோம்பல் – விருந்தினரைப் பேணுதல்
வேட்கை – ஆவல், பற்று
வேதிக்கழிவு – நச்சுத்தன்மை உடைய